செய்தி வெளியீடு எண்: 707 நாள்:22.10.2019

## செய்திவெளியீடு

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் ஆணைக்கிணங்க கூட்டுறவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்

## வடகிழக்குப் பருவமழை மற்றும் பண்டிகைகாலத்தையொட்டி கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் விடுப்பின்றி பணியாற்ற வேண்டும்.

## மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் தகவல்.

*********

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (22.10.2019) தலைமைச்செயலகத்தில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழை மற்றும் பண்டிகை காலத்தில் கூட்டுறவுத்துறையால் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது: கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், மழை மற்றும் புயல் காரணங்களால் பாதிப்புகளுக்கு உள்ளாககூடிய தாழ்வான பகுதிகளை கண்டறிந்து அப்பகுதியில் உள்ள நியாயவிலைக் கடைகள் மற்றும் கிடங்குகளில் உள்ள பொருட்களை, அரசு கட்டிடங்கள் உள்ளிட்ட உயர்வான பகுதிகளில் உள்ள கட்டிடங்களுக்கு மாற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறப்பு கூடுதல் ஒதுக்கீடு பெற்று தேவையான அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து பாதுகாப்பாக சேமித்து வைத்திடவும், அத்தியாவசியப் பொருட்களின் நகர்வு மற்றும் விநியோகத்தை அன்றாடம் கண்காணித்து, அனைத்து கிடங்குகள் மற்றும் நியாயவிலைக் கடைகளிலும் போதுமான அளவு அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு உள்ளதை அலுவலர்கள் உறுதி படுத்திட வேண்டும். எளிதில், அணுகமுடியாத பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி தேவையான அளவு உணவுப் பொருட்களை இருப்பு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அரிசி, மண்ணெண்ணெய், உப்பு, மெழுகுவத்தி மற்றும் தீப்பெட்டிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை தேவையான அளவு இருப்பு வைத்திருக்கவும், தேவையான வாகனங்கள், தார்பாய்கள், மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்கள் சேதமடைந்து நுகர்வுக்கு ஏற்றதாக இல்லாதபோது அப்பொருட்களை உடனடியா அப்புறப்படுத்திவிட்டு, அதற்கு மாற்றாக நல்ல தரமான பொருட்களை காலம் தாழ்தாமல் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்புவதை உறுதி செய்திட வேண்டும். நியாயவிலைக் கடைகளின் கட்டடங்களில் பழுது இருந்தால் அதனை உடனடியாக அரசு சார்ந்த மாற்று இடங்களில் பொருட்களை வைத்திடவும், தரைப் பகுதி ஈரமாக இருப்பின், அத்தியாவசியப் பொருட்களை மரக்கட்டைகளின் மீது அடுக்கி பாதுகாப்பாக வைத்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மலைப் பகுதிகளில் அசாதாரண சூழ்நிலை உருவாகும் முன்னரே தேவையான அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வைத்திட வேண்டும். உள்ளாட்சி மற்றும் வருவாய்த்துறை உள்ளிட்ட பிற துறை அலுவலர்களுடன் இணைந்து செயல்படவேண்டும்.

மண்டல இணைப்பதிவாளர்கள் இதற்கென கட்டுப்பாட்டு அறை மற்றும் பிரத்தியோக தொலைபேசி எண் ஒதுக்கீடு செய்து, துணைப்பதிவாளர் நிலையில், ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமித்து (Nodal Officer) தினந்தோரும், நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் மற்றும் மழையால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தீர்வுகாணப்படவேண்டும். இந்த கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண். அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஒட்டப்பட்டு பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தகுதியான விவசாயிகள் அனைவருக்கும் உரிய நேரத்தில் பயிர்கடன் வழங்கப்படுவதையும், விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உரங்களும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டு, எவ்வித தடையுமின்றி உரங்கள் கிடைப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

கூட்டுறவுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், வடகிழக்குப் பருவமழை காலத்தில் விடுப்பில் செல்வதை தவிர்த்து பொதுமக்களுக்கு சிறப்பாக பணியாற்றவும், இதுபோன்ற காலங்களில் துறையின் செயல்பாடு மிகவும் முக்கியமானதாகவும் உள்ளதால், அனைவரும் சிறப்பாக பணியாற்றிட வேண்டும் என்றார்,

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் முனைவர் க. இராஜேந்திரன், திரு. ம. அந்தோணிசாமி ஜான்பீட்டர், திரு. ஆர். ஜி. சக்திசரவணன், திருமதி வெ. லெட்சுமி, திரு.கே.ஜி.மாதவன், திரு. பா. பாலமுருகன், டாக்டர் சு. செந்தமிழ்ச்செல்வி, டாக்டர் டி.அமலதாஸ், திரு.கோ.செந்தில்குமார், திரு. மு.முருகன், டாக்டர் கா.வே.சு.குமார் ஆகியோர் உள்ளனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**